பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 05 | வெள்ளிக்கிழமை | 22.09.2023 | அதிர்வு 52

## வேட்புமனுக்கள் விரைவில் இரத்து

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களையும் இரத்துச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் அரச நிர்வாக, 02

# ரணில் – பைடன் சந்திப்பு



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்குபற்றிய அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வழங்கிய இரவு விருந்துபசாரத்தின்போதே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மிகவும் சிநேகபூர்வமாக வரவேற்றார். 09



# பிள்ளையான் விடுதலையில் நீதி மோசடி!



## புட்டுப் புட்டு வைத்தார் சுமந்திரன்

**“ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையானுக்கு) முதலில் பிணை வழங்கப்பட்டு, பின்னர் அந்த வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்ட விவகாரத்தில் நீதித்துறையில் மோசடி இடம்பெற்றுள்ளது. மக்களின் நம்பிக்கைக்கு எதிரான இந்த மாபெரும் துரோகத்துக்கு உடந்தையாக இருந்து இன்னும் பணியாற்றும் நீதிபதிகளைப் பற்றி நான் கவலைப்படுகின்றேன்.”** 02

## தெரிவுக்குழுவை அமைத்து காலத்தை இழுத்தடிக்காது

# சர்வதேச விசாரணையை உடனே நடத்த வேண்டும்!

### சபையில் ஹக்கீம் இடித்துரைப்பு

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து காலத்தை இழுத்தடிக்காது சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தேசிய 02



## கஜேந்திரனைத் தாக்கியோர் நேற்று பிணையில் விடுவிப்பு

### தடுத்துவைத்தால் இனக்கலவரம் வெடிக்கும் என்று பொலிஸ் விண்ணப்பித்ததையடுத்து

– அப்துல் சலாம் யாசீம் –

திருகோணமலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 14 பேர் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு 09






## இரகசியம்

நீதித்துறை சந்தி சிரிக்கும்நிலைக்குவந்திருக்கின்றது. ஏற்கனவே அரசல் புரசலாகப் பேசப்பட்டு வந்த விடயம்தான். சம்பந்தப்பட்ட நீதிபதிகள், நீதியரசர்கள் பெயர்கள் கூட சட்ட வட்டாரங்களில் பேசப்பட்டே வந்தன. இப்போது 05

## வேட்பு மனுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் இதற்காக ஏகமனதாக உடன்பாடு எட்டப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படாமையால் வேட்புமனுவைச் சமர்ப்பித்த வேட்பாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், குறித்த நெருக்கடியான சூழலுக்குத் தீர்வு காணும் நோக்கில், சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்ய இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பாதுகாப்பு தொடர்பான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையில் 50 பக்கங்களுக்கும் மேல் எமது பாதுகாப்புத் துறையில் உள்ள பல்வேறு பிரிவினரிடையே உள்ள மோதல்கள், கருத்து வேறுபாடுகள் தொடர்பிலேயே கூறப்பட்டுள்ளது.

அது தொடர்பில் கூறும்போது முன்னாள் ஜனாதிபதியையும் வைத்து ஏதோவொன்று இந்த அரசுக்காகச் செய்யப்பட்டுள்ளது. அரச புலானாய்வு மற்றும் இராணுவப் புலனாய்வு ஆகியவற்றில் 7 ஆயிரம் பேர் இருக்கின்றபோதும் சம்பவம் தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை என்று நாட்டின் தலைவர் கூறியுள்ளார். அதற்கான காரணமே இப்போது வெளியில் வருகின்றது. மறைந்திருந்த சூத்திரதாரிகள் தொடர்பில் வெளிவராத சம்பவங்கள் வெளிவருகின்றன. இதன் உண்மைகளைக் கண்டறிய வேண்டும்.

இவ்வளவு பலமான புலனாய்வுத் துறை இருந்தும் சஹ்ரானின் சின்னக் குழுவினர் எப்படித் தாக்குதலை நடத்தினர் என்று ஆராய வேண்டும். சஹ்ரான் குழுவினர் எத்தனையோ இடங்களில் தங்கியிருந்துள்ளனர். பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பில் தெரியாது புலனாய்வுப் பிரிவினர் இருந்தனரா? சரியாக ஆராய்ந்தால் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சாரா எனும் புலஸ்தினி என்ற பெண்ணுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவர் சாய்ந்தமருதில் குண்டுவெடிப்பில் இறந்தார் என்று கூறப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் நீதிமன்றத்துக்கு அவரின் அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படுகின்றது. அது எவ்வித கீறலும் இன்றி புதிதாகவே உள்ளது. அவர் அங்கே இருந்தார் என்று காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. மூன்று தடவைகள் டீ.என்.ஏ. பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. விசாரணைகளின் பல விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. வெளிச் சக்தியின் தலையீட்டில் தகவல்கள் மறைக்கப்பட்டனவா என்ற சந்தேகங்களும் உள்ளன. இதனால் உண்மைகளை அறிய சர்வதேச விசாரணைகள் அவசியமாகும். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்து காலத்தை இழுத்தடிக்கக் கூடாது.” - என்றார்.

## பிள்ளையான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எனக்கு முன்னர் பேசிய உறுப்பினர் கர்மா என்று ஒன்று உள்ளது, இந்தப் படுகொலைகளுக்கு (ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் உயிரிழப்புகளுக்கு) காரணமானவர்கள் இறுதியில் அதற்காகப் பாதிக்கப்படுவார்கள் என்று கூறி முடித்தார். அவருடைய வார்த்தைகள் ஏற்கனவே உண்மையாகிவிட்டன. இதனைப் பொறியாகப் பயன்படுத்தி ஆட்சிக்கு வர வேண்டியவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த நாட்டு மக்களால் அந்த ஆசனத்தில் இருந்து துரத்தப்பட்டார். எனவே, கர்மா அவருடைய நம்பிக்கையின்படி உள்ளதாகவே கருதலாம்.

எந்தவொரு சர்வதேச விசாரணையையும் அது இந்த நாட்டின் இறையாண்மையை மீறுவதாகும் என்று காரணம் குறிப்பிட்டு அதை அனுமதிக்க முடியாது என்று கூறிய பலர் இப்போது சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுக்கின்றனர். அதுவும் ஒரு திருப்பம் தான்.

உள்நாட்டுப் போரின் போது நடந்தவை எனக் கூறப்படும் அத்துமீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை மட்டுமே சுதந்திரமான விசாரணையாக இருக்கும் என்று நாங்கள் கூறியபோது, அவர்கள் “இல்லை, எங்கள் அரசமைப்பு அதை அனுமதிக்கவில்லை” என்று கூறினார்கள். அரசமைப்புச் சட்டம் அதைப் பற்றி எதுவும் கூறவில்லை.

உண்மையில், நீதி மற்றும் அரசமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சர் எதிர்க்கட்சியில் இருந்தபோது, உயர் நீதிமன்ற நீதிபதிகள் மீதான குற்றச்சாட்டுக்களை சர்வதேச நீதிபதிகள் விசாரிப்பதற்கான தனி நபர் பிரேரணை ஒன்றை முன்வைத்தார். அது அரசமைப்புக்கு எதிரானது என்று அவர் அப்போது நினைக்கவில்லை. இது அரசமைப்புக்கு எதிரானது என்று இன்றும் பலர் நினைக்கவில்லை. இது அரசமைப்புக்கு எதிரானதே அல்ல.

உள்நாட்டுப் போர் தொடர்பாக, சர்வதேச விசாரணைகள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்றுள்ளன. நிபுணர்கள் குழு அறிக்கை உள்ளது. மற்றும் (ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடத்திய) இலங்கை பற்றிய விசாரணை உள்ளது. அவை பற்றிய அறிக்கைகள் உள்ளன.

2015 இல் ஒரு கலப்பின நீதிமன்றத்துக்கு அரசு ஒப்புக்கொண்டது. பின்னர், அந்த ஒப்புதலில் இருந்து பின்வாங்கி, நாங்கள் எங்கள் இணை அனுசரணையை திரும்பப் பெறுகின்றோம் என்று கூறியது. அரசும் மற்றொரு தரப்பினரும் மோதும் விடயத்தில் கூட, பிணக்குப்படும் ஒரு தரப்பாக அரசு இருப்பதால் அதைத் தீர்த்து வைப்பதற்கு சர்வதேச விசாரணை மட்டுமே சாத்தியமாகும் என்பதனால் நான் இந்த விடயங்களை நினைவுபடுத்துகின்றேன்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விடயத்துக்கு வருவோமானால், அது தொடர்பில் 2019 ஒக்டோபரில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதன் கண்டுபிடிப்புகளை அறிக்கை செய்தபோது, இப்போது சொல்லப்படுவதை எல்லாம் நாங்கள் மிகவும் குறிப்பாக அதில் சுட்டிக்காட்டியிருந்தோம். அதன் இறுதிச் சுருக்கக் குறிப்பில் கூட, அந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வலுவான தலைவர் ஒருவரை உருவாக்க வேண்டும் என்ற அழைப்பை (எதிர்பார்ப்பை) ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இது (இந்தத் தாக்குதல்) மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வியை எழுப்பினோம். எல்லாமே அதை நோக்கியே இருந்ததால் நாங்கள் அப்படி அதில் சொன்னோம். ஆனால், எங்களிடம் உறுதியான ஆதாரம் இல்லை. ஆனால், அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலை ஆதாரங்களும் அதை நோக்கியே சுட்டிக்காட்டின.

இப்போது அது மெதுவாக ஆனால் நிச்சயமாக கட்டவிழ்ந்து வெளிப்படுத்தப்படுகின்றது. மீண்டும் சனல் 4 அம்பலப்படுத்தல்களுக்கு வருவோமானால் ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பாக சனல் 4 வெளிப்படுத்தியவற்றை இன்று பலர் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்று நான் சொல்ல வேண்டும். இதே சனல் 4, பல வருடங்களுக்கு முன்பு, ‘கொலைக் களம்’ மற்றும் ‘கொலைக் களம் 2’ என்ற இரண்டு ஆவணப்படங்களை வெளியிட்டது. அதைப் பற்றி நிறைய விடயங்கள் கூறப்பட்டன. ஆனால் அதை மறுத்தவர்கள் கூட இப்போது வெளியிடப்பட்ட ஆவணப்படத்தை நம்புகின்றார்கள்.

நாங்கள் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கும் பல விடயங்கள், அங்கு (சனல் 4 இல்) சொல்லப்படும் கதையுடன் பொருந்தக்கூடிய பல நிகழ்வுகள் இருப்பதால், அது சொல்வது உண்மை என்பதை நாங்கள் அறிவோம். மேலும் சனல் 4 வெளிப்படுத்தலில் இல்லாத ஒரு விடயத்தை (மேலதிகமாக) நான் குறிப்பிட விரும்புகின்றேன். அது, ஆஸாத் மௌலானாவின் குரல் பதிவு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு அவர் அளித்த வாக்குமூலத்தில் அவர் வெளிப்படுத்தியுள்ளவை. ஆனால், அதைச் செய்வதற்கு முன், நான் தோன்றிய (ஆஜராகிய) சில விடயங்களில் எனது தலையீடு குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தை விதியின் 19 ஆவது சரத்தின் அடிப்படையில் நான் வெளிப்படுத்த வேண்டும்.

சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையானுக்கு) பிணை வழங்கப்பட்ட போது நான் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன். பாதிக்கப்பட்ட தரப்புக்காக நான் ஆஜராகி, நவம்பர் 2020 இல் பிணை வழங்கப்படுவதை எதிர்த்தேன். எனவே, இந்த விவகாரத்தில் எனக்கு சில தொடர்புகள் உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நன்னடத்தை விதியின் 19 ஆவது சரத்தின் அடிப்படையில் நான் அதை வெளிப்படுத்த வேண்டும். நான் நிலையியல் கட்டளை 83 (1) ஐயும் குறிப்பிட வேண்டும், அதில் “நீதிபதிகள் உட்பட சில பிரமுகர்களின் தனிப்பட்ட நடத்தைகள் நாடாளுமன்றத்தில் உரையில் குறிப்பிடப்படக் கூடாது” என்று கூறப்படுகின்றது. நான் அதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்,

(3ஆம் பக்கம் பார்க்க...)

# யாழ்.போதனாவில் போராட்டம்




– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்திஜீவிகள் வெளியேறுவதைத் தடுப்பதிலும், அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு உள்ள தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும், தரமான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்து இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நன்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

## பிள்ளையான்...

(2 பக்கத் தொடர்ச்சி...)

ஏனென்றால் நான் சில நடத்தைகளைக் குறிப்பிடப் போகின்றேன். ஆனால் அது தனிப்பட்ட நடத்தை அல்ல. ஆனால், அங்குள்ள நீதிபதிகளின் அதிகாரபூர்வமான நடத்தையை நான் குறிப்பிடப் போகின்றேன். எனவே, நான் எந்த நிலையியல் கட்டளையையும் மீறவில்லை.

பிள்ளையானுக்கு முதலில் பிணை வழங்கப்பட்டு, பின்னர் அந்த வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டமை எப்படி என்பதை ஆஸாத் மௌலானா மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அவர் நீதிபதிகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். நான் அவற்றை இங்கே குறிப்பிடலாம், ஆனால் அவர்களின் உரித்துக் கருதி நீதிபதிகளின் பெயர்களை நான் குறிப்பிடவில்லை. சக குற்றவாளி ஒருவரின் வாக்குமூலம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தால் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையை அடுத்து, நீதிபதி ஒருவருடன் தானும் கலந்துகொண்ட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது என்று அவர் கூறுகின்றார். (வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டமையை ஆட்சேபித்து) மேன்முறையீடு செய்யப்படும் என்றும், மேலும் அந்த வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாத ஆதாரம் என்று நீதிபதி நிராகரிப்பார் என்றும் அங்கு திட்டமிடப்பட்டது என்றார் அவர். அது உண்மையில் நடந்தது. அவர் குறிப்பிடும் நீதிபதியின் பெயரே அந்த உத்தரவை வழங்கிய நீதிபதி ஆவார்.

சந்தர்ப்பவசமாக, இன்று உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் அந்த நீதிபதி – இது மிகவும் பாரதூரமான விடயம் – சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இலஞ்ச வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர். அப்போது அவர் நீதிபதியாக அமர்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் அரசு மாறியதும், மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இருந்த அந்தக் குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டது. பின்னர் பதவி உயர்வு பெற்று தற்போது உயர் நீதிமன்ற நீதிபதியாக அவர் உள்ளார். இது நாட்டில் நடக்கும் அதிர்ச்சிகரமான விடயம் அல்லவா? அவர்தான் திட்டமிட்டு மேற்படி கூட்டத்தை நடத்தியிருக்கின்றார். 'இந்த வாக்குமூலத்தை ஏற்க முடியாது என்று தீர்ப்பளிப்பேன், அதன்பிறகு, பிள்ளையானுக்கு எதிராக வழக்குத் தொடர எந்த ஆதாரமும் இல்லை என்று சட்டமா அதிபர் சொல்லலாம்' என்று கூறியிருக்கின்றார். ஆனால், சட்டமா அதிபர் அப்படி வெளிப்படையாக (பிள்ளையானை விடுவிப்பதற்கு) எதிர்ப்புத் தெரிவித்தார். அதற்காக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவுக்கு நான் தலைசாய்த்து மரியாதை செலுத்த வேண்டும். பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோனும் இந்தக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து விட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது, இவற்றில் சில உண்மைகள் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் நான் மேல் நீதிமன்றத்தில் ஒரு சிறப்பு நீதிபதி முன் ஆஜராகும்போது – மேலும் அந்தச் சிறப்பு நீதிபதி எவ்வாறு நியமிக்கப்பட்டார் என்று ஆஸாத் மௌலானா கூறுகின்றார். ஏனெனில், அங்கு அமர்ந்திருந்த நீதிபதி இதனை (இந்த ஏற்பாடுகளுக்கு) இணங்க மறுத்தமையால், (இக்கட்டைத் தவிர்ப்பதற்கு) அவருக்கு இடமாற்றம் தேவைப்பட்டதால், அவர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். மேலும் அவர் அவ்வாறே கொழும்புக்கு மாற்றப்பட்டார் என்பதும் எங்களுக்குத் தெரியும். பின்னர், இந்த விடயத்தைச் செய்வதற்கு அப்போது வவுனியாவில் அமர்ந்திருந்த மற்றுமொரு நீதிபதியை அணுகினர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்காக அந்த நீதிபதி 'இந்த விடயத்தில் கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கத்தோலிக்கர், இந்து அல்லது முஸ்லிம் நீதிபதி பிள்ளையானை விடுவித்தால் சந்தேகம் ஏற்படும், எனவே தமிழ் கத்தோலிக்க நீதிபதியைக் கண்டுபிடிப்போம்' – என்று கூறியிருந்தார். தமிழ் கத்தோலிக்க நீதிபதி ஒருவருடன் பேசினர். அவர் இந்தப் பிணை மனுவை விசாரிப்பதற்காக மட்டக்களப்புக்கு விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இந்த வகையில்தான் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் அந்த வழக்கு எடுக்கப்பட்டது." – என்றார் சுமந்திரன் எம்.பி.

இந்தச் சமயத்தில் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) குறுக்கிட்டார். "என்னுடைய பெயரை சுமந்திரன் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கின்றார். சுமந்திரன் நீதிமன்றத்தைப் பற்றியும் என்னுடைய வழக்கைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கின்றார். என்னை இந்த நாட்டின் நீதிமன்றம் விடுத்துள்ளது" – என்றார்.

அதற்குப் பதிலளித்து சுமந்திரன் எம்.பி. தொடர்ந்து பேசினார்.

அவர் கூறியவை வருமாறு:-

"எனக்கு அது தெரியும், அதனால்தான் (உண்மைகளைத்) தெளிவுபடுத்துகின்றேன். இது ஒழுங்குப் பிரச்சினையல்ல. மட்டக்களப்பு மேல் நீதிமன்றில், அந்த விசேட நீதிபதி முன்னிலையில் நான் அன்று ஆஜராகியிருந்தேன். மேலும் நான் பிணை வழங்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால் நீதிபதி அதிர்ச்சி அடைந்தார். அவர் எதிர்பார்க்கவில்லை. நான் ஆஜராக அந்தஸ்து இல்லை என்று கூறினார். இது எல்லாம் பதிவில் இருக்கின்ற விடயம். பின்னர் அவர் வழக்கை ஒத்திவைத்தார். சுமார் அரை மணி நேர இடைவெளி எடுத்தார். ஒருவேளை சில தொலைபேசி அழைப்புகளைச் செய்திருக்கலாம். பிறகு வந்து "ஆ... சரி நீங்கள் உங்கள் சமர்ப்பணங்களைச் செய்யுங்கள்" என்று கூறிவிட்டு, பிணை வழங்கப்பட்டது. அன்று மட்டக்களப்பு நீதிமன்ற அறையை விட்டு நாங்கள் வெளியேற முடியவில்லை. (சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து குறுக்கிட்டார்) அங்கு அவர் இன்னமும் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றார். மக்கள் திரண்டு நின்று கொண்டிருந்தனர். நாங்கள் வெளியே செல்வதற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியிருந்தது. அன்று நீதிமன்ற வாளாகம் எப்படி இருந்தது என்பதை சனல் 4 காட்டியது. அவர் (பிள்ளையான்) வெளியே வந்ததும் அவருக்குப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்று அவர் வெளியே வருவதை முற்கூட்டியே அறிந்திருந்தார்கள் என்பது, அங்கு திரண்டிருந்த மக்கள் கூட்டம், அவரை வரவேற்ற முறைமை என்பன காட்டுகின்றன. இவை அனைத்தும் திட்டமிட்டு செய்யப்பட்டன.

இப்படி நடந்த பல விடயங்களுக்கு நானே சாட்சி. அதனால்தான் பிள்ளையான் பற்றி எதுவும் பதிவிடாமல் மற்றைய விடயங்களை இங்கே பதிவு செய்கின்றேன். பிள்ளையானைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் செய்த கொலைகளின் பட்டியலை மிக விரைவில் வெளியிடப் போகின்றார் என்று ஒருவர் கூறியுள்ளார். அவரைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை,. ஆனால், மக்களின் நம்பிக்கைக்கு எதிரான இந்த மாபெரும் துரோகத்துக்கு உடந்தையாக இருந்து இன்னும் பணியாற்றும் நீதிபதிகளைப் பற்றி நான் கவலைப்படுகின்றேன். நன்றி!" – என்றார்.

# சனல் 4 கயிற்றை இறுகப்பிடிப்போருக்கு அது இறுதியில் மரணக் கயிறாக மாறும்

## சபையில் இப்படி கம்மன்பில எச்சரிக்கை

சனல் 4 கயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பவர்களுக்கு அது மரணக் கயிறாக மாறும் என்ற எச்சரிக்கையை விடுப்பதாக பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரத்தம் மற்றும் கண்ணீரை அரசியல் இலாபத்துக்காக மாற்றுவதற்கு கீழ்த்தரமான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2001 - 2004 காலத்தைப் போன்றும் 2015 காலத்தைப் போன்றும் புலனாய்வுத்துறையை வீழ்ச்சியடையச் செய்து இராணுவத்தினரைப் பலவீனமாவர்களாக்கி மீண்டும் நாட்டை இரத்த வெள்ளத்துக்குள் தள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது.

அரசைத் தாக்குவதாகக் கூறி எமது இராணுவத்தினரைத் தாக்குவதற்கு இடமளிக்க முடியாது. எமது தாய்நாட்டுக்கு தாக்குவதற்கும் இடமளிக்க முடியாது. இதனால் சனல் 4 கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அது மரணக் கயிறாக மாறும் என்ற எச்சரிக்கையை நாங்கள் விடுகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோருபவர்கள் சில விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்காவின் விசாரணை அமைப்பு இங்கே வந்தது, ஆஸ்திரேலியின் பொலிஸ் வந்தது. அவர்கள் இங்கே விசாரணை நடத்தி



அறிக்கையை முன்வைத்துள்ளனர். ஏன் அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கேட்கின்றோம். இதேவேளை, இந்தப் பிரச்சினைகளை மேற்குலக நாடுகளில் இருந்து கொண்டு இங்கே பிரிவினை வாதத்துக்கு முயற்சிப்பவர்களுக்கு இடமளித்துவிடக் கூடாது." – என்றார்.

# இரத்தக்கறை இல்லாமல் இருந்திருந்தால் விசாரணைக்கு முகம் கொடுத்திருக்கலாம்

## ராஜபக்ஷக்களைச் சாடுகின்றார் மரிக்கார்

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ராஜபக்ஷக்களின் கரங்களில் இரத்தக்கறை இல்லாமல் இருந்திருந்தால் தைரியமாக விசாரணைகளுக்கு முகம் கொடுக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் 2019.04.21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. குண்டுத் தாக்குதல் தொடர்பில் தகவல் கிடைத்திருந்தும் மிலேச்சத்தனமான தாக்குதலைத் தடுக்கப் பாதுகாப்புத் தரப்பினர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது பிரச்சினைக் குரியது.

குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சிறந்த அதிகாரிகளை கோட்டபய ராஜபக்ஷ பதவியேற்றவுடன் இடம்மாற்றம் செய்தார். ஒரு சிலரைப் பதவி நீக்கி நெருக்கடிக்குள்ளாக்கினார். இரத்தக் கறை இல்லாமல் இருந்திருந்தால் தைரியமாக விசாரணைகளுக்கு முகம் கொடுத்திருக்கலாம்.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் நல்லாட்சி அரசு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. ஏப்ரல் 25 ஆம் திகதி 'நான்தான் ஜனாதிபதி வேட்பாளர்' எனக் கோட்டபய ராஜபக்ஷ அறிவித்தார். கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் ஐக்கிய தேசியக் கட்சியை நாட்டு மக்கள் முழுமையாகப் புறக்கணித்தார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பொருளாதாரப் பாதிப்புக்குப் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்கள், முஸ்லிம் சமூகத்தினர் நியாயத்தைக் கோருகின்றார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் பாதுகாவலனாகச் செயற்படப் போகின்றாரா? அல்லது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கப் போகின்றாரா? என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்றபோது அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே நாட்டில் இல்லை என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்



பிடுகின்றார்கள். யுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கொழும்புக்கு வருகை தந்து தாக்குதல்களை நடத்தவில்லை. வடக்கில் இருந்த நிலையில்தான் அவர் தாக்குதலை நடத்தினார்.

நௌபர் மௌலவி ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிக் என குறிப்பிடப்படுவது உண்மையல்ல. அன்டன் பாலசிங்கத்தைப் போலவே நௌபர் மௌலவி செயற்பட்டார். அன்டன் பாலசிங்கம் பிரபாகரன் அல்ல. ஆகவே நௌபர் மௌலவி பிரதான சூத்திரதாரியல்ல என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கைகளில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. உண்மை தொடர்ந்து மூடி மறைக்கப்படுகின்றது. ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச விசாரணையே இறுதித் தீர்வாக அமையும்,' – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரண காரியங்களுடன் விடயம் அம்பலமாகியிருக்கின்றது. அவ்வளவுதான்.

ஜோஸப் பரராஜசிங்கம் கொலை போன்ற விடயங்களில் சில நீதிபதிகளின் நடவடிக்கைகள், செயற்பாடுகள், உத்தரவுகள் கண்டு அதிர்ந்து போய், விவரம் புரியாமல், குழம்பி நின்ற சட்டத் தரப்புகளுக்கு, இடையில் புரியாமல் இருந்த விடயங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் ஆஸாத் மௌலானா. கோடிட்ட இடங்களை ஆஸாத் மௌலானா நிரப்ப, 'நீதி பிழைத்தது!' என்பதை சட்டவட்டாரங்கள் முழுமையாக புரிந்து கொண்டன. அதன் பிரதிபலிப்புத்தான் சுமந்திரனின் நேற்றைய நாடாளுமன்ற உரை. நீதி பிழைத்தது என்றால், நீதி தப்பிப் பிழைத்ததா அல்லது பிழையாகப் போய்விட்டதா என்பதை வாசகர்களே முடிவு செய்வர்.

19 வயதில் கொழும்பில் நீதிமன்றங்களின் மையமான ஹல்ஸ்டோர்ப்பில் நீதிமன்ற செய்தியாளராகத்தான் நான் எனது எழுத்தாயுதத்துடன் பணி செய்யப் புறப்பட்டேன். சட்டக் கல்லூரி சட்டமாணவனாகவும் பயின்றேன். எண்பதுகளில் இருந்து மிக முக்கிய வழக்குகளின் செய்தி அறிக்கையிட்ட அனுபவம் எனக்கு உண்டு. பல சட்ட ஜாம்பவான்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிட்டியது.

மற்றைய தமிழ்ச் செய்தியாளர்களுடன் ஒப்பிடுகையில், நீதி – சட்டத்துறையினரோடு அதிகம் நெருங்கி ஊடாடிய பத்திரிகையாளன் நான் என்று கூறலாம் என நினைக்கிறேன்.

பொதுவாக அன்றைய ஜி.ஜி.பொன்னம்பலத்தில் இருந்து இன்றைய சுமந்திரன் வரை தமிழ் சட்டத்தரணிகள் பலருக்கும் எப்போதுமே ஹல்ஸ்டோர்ப்பில் நற்பெயர், கீர்த்தி, மதிப்பு உண்டு. நீதியரசர் சர்வானந்தா, நீதிபதி சிவா செல்லையா முதற்கொண்டு, இப்போது நீதிபதி இளஞ்செழியன் வரை தமிழ் நீதிபதிகளுக்கு இருந்த – இருக்கின்ற – மதிப்பு நான் அறிவேன்.

இப்போது முதல் தடவையாக ஓரிரு தமிழ் நீதித்துறையினரின் பெயர் சந்தி சிரிப்பதாக இருப்பது வேதனைக்குரியது.

துணிச்சலோடு நீதியை நிலை நாட்டுவதற்கு, பிரதம நீதியரசராகவோ, நீதியரசராகவோ, நீதிபதியாகவோ இருக்க வேண்டும் என்பதல்ல. கீழ்நிலை நீதிமன்ற நீதிவானாக இருந்து கொண்டும் நீதியை உறுதியுடன், துணிச்சலுடன், பக்கம் சாராமல், நடுநிலை நின்று, தலை நிமிர்ந்து வழங்கி, மதிப்பும் மாண்பும் மனசாட்சிக்கு மகிழ்வும் பெற முடியும்.

வடகிழக்கு அமெரிக்காவின் றொட் ஐலண்டில் புராவிடன்ஸ் என்ற மாநகர சபையின் போக்குவரத்து நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதியாக 1985 முதல் கடந்த 38 ஆண்டுகளாக பிராங்க் கப்ரியோ என்பவர் பணிபுரிந்து வருகிறார். முன்னாள் இராணுவ அதிகாரியான அவர் நீதிமன்றத்தைக் கையாளும் விதம் அலாதியானது. அவரது அமர்வுகளின் காணொலி முகப்புத்தகங்களிலும் பிற சமூக ஊடகங்களிலும் மிகப் பிரசித்தம். 2017இல் ஒன்றரைக் கோடியாக இருந்த அவரின் காணொலி அன்பர்களின் எண்ணிக்கை, 2022 இல் ஐம்பது கோடி பார்வையாளராக உயர்ந்துள்ளது. அவரது நீதிமன்ற அமர்வுகள் பற்றிய ஒரு வீடியோவை மட்டும் நாலு கோடி 36 லட்சம் பேர் பார்த்துள்ளனர்.

அவரது நீதிமன்ற அமர்வுகளை முகப்புத்தகத்தில் தினசரி ஒரு பத்துப் பதினைந்து நிமிடமாவது பார்க்காவிட்டால் எனக்கு அன்றைய தினம் விடியாது. அவ்வளவு தூரம் நான் அவர் ரசிகன்.

நேர்த்தியாக, கனிவாக, குற்றம் சுமத்தப்பட்டவர்களின் மனதையும் வெல்லும் விதத்தில் நீதியை நிலை நாட்டுவதில் அவர் கைதேர்ந்தவர். ஆங்கிலம் ஓரளவு புரிந்தவர்கள் அவரின் அந்தக் காணொலிகளை இயன்றவரை தேடிப் பார்க்கப் பரிந்துரைக்கிறேன்.

இப்போது சில தமிழ் நீதிபதிகளின் பெயர்கள் விலை போனவர்களின் பெயர்ப் பட்டியலில் வந்தாலும், இன்னும் நம் மத்தியில் கீழ்நிலை நீதிமன்றங்களில் கூட, துணிச்சலுடனும் நீதிக்காக நிமிர்ந்து நிற்கும் சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். இப்போது சர்ச்சையைக் கிளப்பும் வழக்குகளில் நீதிக்கும் சட்டத்துக்குமாக வளைந்து விட்டுக் கொடுக்காது நிற்கும் அவர்கள் குறித்து பெயர் குறிப்பிடாமல் நாங்கள் பெருமையோடு பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதும் மறுக்கப்பாலதல்ல. இந்த சமயத்தில் அவர்களுக்கு ஒரு சல்யூட்.

இனி நீதித்துறை சார்ந்த ஓர் அனுபவத்தை கூறி இன்றைய பதிவை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் 1977 முதல் 84 வரை பிரதம நீதியரசராக இருந்த நெவில் சமரக்கோனை சற்றுத் தொலைவில் இருந்து பார்த்துப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருந்தது.

1982 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மக்கள் வாக்களித்த முதல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, காலி முகத்திடலில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தபோது, சில மீற்றர் தூரத்தில் ஊடகவியலாளர் கொட்டகையில் முதல் அணியில் இருந்து, அதைப் பார்த்து செய்தி சேகரித்த அனுபவம் எனக்கு உண்டு.

எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஜே.ஆரின் சட்டத்தரணி நெவில் சமரக்கோனே. ஜே.ஆர். தாம் பிரதமரானதும் அவரையே பிரதம நீதியரசராக நியமித்தார். ஆனால் என்று அந்தப் பதவியை அவர் ஏற்றாரோ அன்றிலிருந்து ஜே.ஆரைத் தமக்கு கிட்ட நெருங்கவே அவர் விடவில்லை. பிரதம நீதியரசர் பதவிக்கு பெருமை சேர்த்த பெருமனிதராக அவர் இன்றும் போற்றப்படுகின்றார்.

அந்தப் பதவியில் தங்களது பெயரைச் சீரழித்த சிலரும் இருக்கின்றார்கள். அப்படி சர்ச்சைக்கு உள்ளானவர்களில் ஒருவர் நீதியரசர் சரத் என். சில்வா.

இப்போது அமைச்சராக இருக்கும் ரிரான் அலஸின் சகோதரர் கணினிக் கல்வி தொடர்பான சர்வதேச கல்வி நிறுவனம் ஒன்றை நடத்தி வருபவர். அவரின் அந்த நிறுவனத்தின் கிளை ஒன்றை நான் முன்னர் பணியாற்றிய ஊடக நிறுவனத்தின் நிர்வாகி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்திருந்தார்.

ரிரான் அலஸின் குடும்பத்துடன் நீதியரசர் சரத் என். சில்வா மிகுந்த நெருக்கமான நட்பும் தொடர்புகளும் கொண்டிருந்தார். எனது அப்போதைய பத்திரிகையின் நிர்வாகி தமது கல்வி நிறுவன விடயமாக ரிரான் அலஸின் சகோதரரைச் சந்திக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற சரத் என். சில்வா அங்கு வர விருப்பதால் அவரைச் சந்திப்பதற்காக எமது ஊடக நிர்வாகி என்னையும் அழைத்துச் சென்றார்.

அங்கு சரத் என். சில்வாவைச் சந்தித்தேன். தனியாக ஓர் அரை மணித்தியாலம் உரையாடினேன். நான் கடைசியாக அவரிடம் கேட்ட ஒரு கேள்வியுடன் அவர் முகத்தை முறித்துக் கொண்டு மெல்ல எழுந்து நகர்ந்து விட்டார்.

ரிரான் அலஸின் சகோதரரின் கொழும்பு அலுவலகத்தில் அன்று தனியாக நாங்கள் இருவரும் சந்தித்தோம்.

அறிமுகம், குசலம்,விசாரிப்பு முடிந்தும் நான் நோண்டத் தொடங்கினேன்.

அப்போதுதான் சந்திரிகா ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்கி இருந்தார். அவரது பதவியின் இறுதிக்காலத்தில் அவர் தலைமையில் கூடிய அமைச்சரவை, மாதிவெலவில் ஒரு பெரிய அரச காணியை அவருக்கு வெகுமதியாக வழங்கத் தீர்மானித்திருந்தது. அவர் பதவி விலகியதும், அப்படி அரச காணியை அவர் பெற்றமைக்கு எதிராக சிலர் தாக்கல் செய்த வழக்கு பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்பு வந்தது.

வழக்கின் விசாரணைக்கு நடுவே காணியைமீண்டும்அரசிடமேஒப்படைத்து, சிக்கலில் இருந்து விடுபட சந்திரிகா விரும்பினார். காணியை மீண்டும் அரசிடமே அவர் ஒப்படைத்தார்.

ஆனால் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவோ சந்திரிகாவை விடுபவராக இல்லை.

"லஞ்சம் வாங்கிப் பிடிபட்ட ஒருவர், லஞ்சப் பணத்தைத் திரும்ப கொடுத்து விட்டார் என்பதற்காக அவரை வழக்கில் இருந்து விடுவிக்க முடியுமா?" என்று நீதிமன்றத்தில் கேட்டிருந்தார் சரத் என். சில்வா.

அதனை அன்று அவரைச் சந்தித்த போது நான் நினைவூட்டினேன்.

"ஏன், நான் அப்படிக் கூறியது தப்பா?" – என்ற சாரப்பட வினவினார் சரத் என். சில்வா.

"இல்லை ஐயா. ஆனால் அப்படி கூறிய நீங்கள், அதற்கு முன்னர் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வழக்கில் அரசு நிதியை தனது சொந்த வங்கிக் கணக்குக்கு மாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, அதை அப்படியே சில காலத்தின் பின் மீளவும் அரச நிதிக்கு திரும்பவும் மாற்றி விட்டமையால் குற்றமற்றவர் என்று தீர்ப்பு கூறி இருந்தீர்களே. அதை எப்படி நியாயப் படுத்துவீர்கள்?" – என்ற சாரப்பட நான் பதில் கேள்வி எழுப்பினேன்.

சரத் என். சில்வா நேரடியாக அப்படி ஒரு கேள்வியை என்னிடம் இருந்து எதிர் பார்க்கவில்லை. அவருக்கு எரிச்சலோ எரிச்சல்.

சாக்குப் போக்குப் பதில் கூறினார்.

"அந்தக் காரணத்துக்காக மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுதலைத் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அந்த வழக்கைத் தொடுத்தவர்கள், அப்படி வழக்குத் தொடுக்கும் உரித்து உடையவர்கள் அல்லர் என்ற அடிப்படையிலேயே அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது" – என்ற சாரப்பட பதிலளித்து என்னுடன் சந்திப்பை அவர் முடித்துக் கொண்டார்.

அதற்குப் பின்னர் சரத் என். சில்வாவை நேரில் சந்திக்கவோ, பேசவோ ஏனோ எனக்கு வாய்ப்புக் கிட்ட வில்லை.

அவரைப் பற்றி பல தொடர்கள் எழுதலாம். சிங்கள பத்திரிகையாளர் விக்டர் ஐவன் ஒரு பெரிய புத்தகமே எழுதி அவரை நார் நாராகக் கிழித்துத் தொங்க விட்டிருக்கிறார். அவை பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

# “சர்வதேச நீதிமன்றத்தின் முன்பாக போர்க்குற்றவாளிகளை நிறுத்துக!”




கிளிநொச்சி நிருபர்

இலங்கையில் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்குச் சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிப்படுத்தக் கோரி நேற்று கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

உலக சமாதான தினத்தையொட்டி வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராடடம் முன்னெடுக்கப்பட்டது.













# பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து மலேசிய பிரதமருடன் ஜனாதிபதி கலந்துரையாடல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹிமிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கும் மலேசியாவிற்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன்போது இரு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் மலேசிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுகின்றன என தெரிவித்த பிரதமர் அன்வர் இப்ராஹிம், மலேசியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கைச்சாதிடுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கும் சாதகமான பதிலை வழங்கியுள்ளார்.

அத்துடன், வலயத்தின் விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் அங்கத்துவம் பெறுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கு ஆதரவளிகின்றோம் என மலேசிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள ஐ.ஓ.ஆர்.ஏ.மாநாட்டில் மலேசிய வெளிவிவகார அமைச்சர் பங்கேற்பார் எனவும் பிரதமர் அன்வர் பின் இப்ராஹிம் உறுதியளித்துள்ளார்.

மலேசியாவிற்கு விஜயம் செய்யுமாறு மலேசிய அரசரின் அழைப்பை மலேசிய பிரதமர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததுள்ளார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்த வருடம் மலேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளேன் என்று அறிவித்துள்ளார்.

## சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம்

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க 20 ஆளும் கட்சி எம்.பிக்கள் கோரிக்கை!



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்த சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட தெரிவுக் குழுவொன்றைஅமைப்பதற்குநடவடிக்கை எடுக்குமாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் இணைந்து சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொலி பாரிய சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது.முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக தெரிவு குழுவொன்றை அமைக்குமாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரினால் சபாநாயருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தெரிவுக்குழு அமைக்கப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்படும். அதற்கமைய தெரிவுக்குழு அமைக்கப்பட்டால் அதன்மூலம் ஜனாதிபதி ஆணைக்குழு, நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஆகியவற்றைப் பெற்று அவற்றை ஆராய்ந்து அதனை சாட்சிகளாக மாற்ற முடியுமென்றால் சட்டமா அதிபர் ஊடாக அதற்கான நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆகியன மீது நாட்டு மக்களுக்குநம்பிக்கைகிடையாது.உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளன. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பது காலத்தை இழுத்தடிக்கும் ஒரு செயற்பாடாகவே அமையும். முறையான விசாரணைகளை முன்னெடுக்காவிட்டால் எதிர்வரும் காலங்களில் இலங்கை இரண்டு சர்வதேச விசாரணைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்க தீரமானிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவில் 11 பேர் உள்ளடங்குவார்கள். இந்த தெரிவுக்குழு 2 மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## வவுனியா நகர பாடசாலை ஒன்றில் அத்துமீறல்

# மாணவனைத் தும்புத்தடியால் அடித்து சப்பாத்து காலால் மிதித்த ஆசிரியர்

வவுனியா நகரத்தில் பிரபல பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவன் ஆசிரியர் தாக்கியமையினால் பாதிப்படைந்து நேற்று வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகர பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை, அப் பாடசாலையின் பகுதித் தலைவராகிய ஆசிரியர் ஒருவர் தொடர்ச்சியாக ஒரு வாரத்திற்கும் மேலாக தும்புத்தடி மற்றும் சப்பாத்து கால்களால் தாக்கியுள்ளார் எனப் பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்துள்ளான்.

ஆனாலும், அந்த மாணவன் மீண்டும் மீண்டும் அந்தக்ஷ்ஆசிரியரிடம் ஏன் என்னை அடிக்கிறீர்கள் என்று கேட்டமைக்கும் பதில் கூறாது அதற்கும் தன்னை அவர் தாக்கினார் எனவும் மாணவன் தெரிவித்துள்ளான்.

எனினும், மாணவன் தன் பெற்றோருக்கு இது தொடர்பாக எதுவும் கூறாமல் இருந்துள்ளான். இதனால் அதிக மன அழுத்ததிற்கு உள்ளான மாணவன் நேற்று முன்தினம் ஒரு கடிதத்தை தனது வீட்டில் எழுதி வைத்திருக்கிறான்.

அந்தக் கடிதத்தைக் கண்ட பெற்றோர் மாணவனை விசாரித்த போது, அவன் நடந்தவற்றைக் கூறி தனது அடிகாயங்களையும் உட்காயங்களையும் காட்டியுள்ளான். தொடர்ந்து மாணவனை வைத்தியசாலையில் சேர்த்த பெற்றோர் இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் மாணவன் மூலம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர். மாணவனின் கடிதத்தைப் பெற்றோர் கொண்டு சென்று வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

மாணவனால் எழுதப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

அன்புள்ள அப்பா, அம்மா நான் சுயநினைவுடன் எழுதும் கடிதம். எனக்கு பாடசாலை செல்ல விருப்பமில்லாத நிலை ஏற்படுகிறது. காரணம் 11.09.2023 தொடக்கம் எனது கற்றல் நடவடிக்கை தொடர்பாக என்னை வகுப்புக்குள் அனுமதிக்கவில்லை. அதற்கு காரணம் கேட்ட போது, பகுதித் தலைவர் (ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது) என்னைக் கீழே விழுத்தி தும்புத் தடியால் அடித்து, சப்பாத்து காலால் மிதித்து, என்னை மாணவன் என்றும் பார்க்காது சித்திர வதை செய்கிறார். அதற்கு பிறகு இடை வேளை நேரம் சிறுநீர் கழிக்க வெளியே சென்ற போது என்னை வெளியே செல்ல விடவில்லை. சிறுநீர் கழிக்க செல்ல கேட்டத்தற்கு தும்புத் தடியால் அடித்து, சப்பாத்து கால்களால் வயிறு மற்றும் கழுத்து பகுதியில் உதைந்தார். 20.09.2023 அன்று என்னை தும்புத்தடியால் அடித்து என் கை விறைத்து நிற்கும் போது என்னை பாவம் என்றும் பார்க்காமல் பூங்கன்றுக்கு தண்ணீர் ஊற்ற விட்டார். எனக்கு உடல் எங்கும் வலியாக உள்ளது. மூச்சு விட கஷ்டமாகவுள்ளது. பாடசாலைக்கு வருவதற்கு சைக்கிள் ஓட நெஞ்சு வலிக்கிறது. இதனால் எனக்கு பாடசாலை வரவே விருப்பமில்லாது இருக்கிறது. எனவே எனது உடம்பிற்கு ஏற்படுமாயின் அதற்கு முழுக் காரணம் எனது பகுதித் தலைவராகிய (ஆசிரியரின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது) ஆசிரியர் ஆவார். - என அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவளை, இந்த ஆசிரியர் ஏற்கனவே ஒரு மாணவனைத் தும்புத்தடி கொண்டு தாக்கிய சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளதாக பாடசாலை பெற்றோர் வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்தப் பாடசாலையில் ஒருசில மாதங்களுக்கு முன் பிறிதொரு ஆசிரியர் வேறு ஒரு மாணவனை செவியில் தாக்கியதில் அவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்பதும், பாடசாலையின் நற்பெயர் கெட்டு விடக் கூடாது என்பதற்காக பெற்றோர் அந்த விடயத்தைப் பெரிது படுத்தாமல் விட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தீர்வைக் காணாமல் புதிய கடன் பெறுவது மேலும் மேலும் நெருக்கடியையே கூட்டும்

## எச்சரிக்கின்றார் ரெலோப் பிரமுகர் சபா குகதாஸ்

-எஸ்.நிதர்ஷன்-

பொருளாதார வீழ்ச்சிக்கான காரணத்திற்கு உரிய தீர்வு இல்லாத நிலையில் வழங்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நாட்டை முன்னேற்றப் போவதில்லை என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ உறுப்பினருமான சபா குகதாஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தீவு பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியைக் கண்டு மீண்டெழ முடியாத நிலையில் சிக்கிய போது, சர்வதேச நாணய நிதியத்தின் முதற்கட்ட கடன் உதவி ரணில் அரசாங்கத்திற்கு கிடைத்தது.

ஆனால் பொருளாதார வீழ்ச்சிக்கு மிகப் பிரதான காரணமாக அமைந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளைக் கூட ரணில் அரசாங்கம் முன் நகர்த்தவில்லை.

இதற்கு மாறாக இனவாதமும் மதவாதமும் மேலோங்கி இனங்களிடையே மேலும் விரிசலையும் சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளமையுடன் து பொருளாதார மீட்சியை மேலும் பாதித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இரண்டாம் கட்டக் கடனைப் பெற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கம் பல்வேறு போலி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வருகின்றது.

இனப்பிரச்சினை விவகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் நாடு பொருளாதாரத்தில் மீண்டெழ வேண்டும் என்ற நோக்கத்திலேயே கடன் கொடுக்கப்படுகிறது.

ஆனால் நாட்டின் கடன் தொகை தொடர்ந்து அதிகரித்து செல்லும் நிலையில் சாதாரண வாழ்வாதாரத்தைப் பெறுகின்ற மக்கள் பாரிய வறுமைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இலங்கை அரசின் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பில் உறுதியான நிலைப்பாடுகளை பெரும் கடன் வழங்குநராகிய சீனா வழங்காத நிலையிலும் -

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மக்களைப் பாதிக்காத வகையில் சீரமைக்கப்படாத நிலையிலும் -

பொருளாதார மீட்சிக்கான உறுதியான பொறிமுறை நகர்வுகள் மற்றும் ஏது நிலைகள் இல்லாத நிலையிலும் -

வழங்கப்படும் கடன் உதவிகள் நாட்டு மக்களை மேலும் வாழ்வாதார சுமைகளுக்கு உட்படுத்தும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் என்பது இலங்கை அரசாங்கத்திற்கு புதிய விடயம் இல்லை. முன்னாள் ஜனாதிபதி பிறேமதாஸ காலத்தில் இருந்து மஹ“ந்த வரைக்கும் பல தடவைகள் கிடைத்துள்ளன.

அவ்வாறெனின் ஏன் இது வரை இலங்கை பொருளாதாரத்தில் வளர்ச்சியடையவில்லை என்ற கேள்வி எழுகிறது.

இதற்கு தான் விடை நிரந்தர அரசில் தீர்வு இல்லாமல் இலங்கை அரசாங்கம் கடன்களைப் பெற்று பொருளாதாரத்தில் மீட்சியடைய முடியாது என்பதாகும். - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீர்வின்றிப் பொருளாதார மீட்சி இல்லை

செந்நாப் போதகன், தமிழ் மறை தந்த திருவள்ளுவன் கூறிய ஒரு விடயத்தை பல தடவைகள் திரும்பத் திரும்ப இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். அது -

"நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்" - என்பதாகும்.

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் கண்டறிந்து, அதைத் தீர்க்கும் வழியைத் தேடி, செய்பவை பிழையாமல் வைத்தியம் செய்ய வேண்டும் என்பது இக்குறளின் அர்த்தம்.

அதாவது நோய் வெளிப்படுத்தும் குணங்குறிக்கு வைத்தியம் செய்யாமல், நோய்க்கு மூல காரணமான விடயத்துக்கு மருத்துவம் செய்ய வேண்டும்.

ஆனால், பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு, துவண்டு கிடக்கும் இலங்கையை அந்தப் பிணியிலிருந்து விடுவிப்பதற்கான மருத்துவத்தை ஆரம்பத்திருக்கும் வைத்தியர்களான அரசியல் தலைவர்களும், பொருளாதார நிபுணர்களும் நோயின் மூல காரணத்துக்குச் சிகிச்சை செய்யாமல் குணங்குறிக்கு மருந்து கொடுப்பவர்களாகவே தோன்றுகிறார்கள்.

அதைத்தான் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ரெலோப் பிரமுகருமான சபா குகதாஸும் சுட்டுகின்றார்.

"பொருளாதார வீழ்ச்சிக்கான காரணத்திற்கு உரிய தீர்வு இல்லாத நிலையில், வழங்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி நாட்டை முன்னேற்றப் போவதில்லை. பொருளாதார வீழ்ச்சிக்கு மிகப் பிரதான காரணமாக அமைந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை ரணில் அரசாங்கம் முன் நகர்த்தவில்லை.

"இதற்கு மாறாக, இனவாதமும் மதவாதமும் மேலோங்கி இனங்களிடையே மேலும் விரிசலையும் சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளமையுடன் பொருளாதார மீட்சியை அது மேலும் பாதித்துள்ளது.

"நாட்டின் கடன் தொகை தொடர்ந்து அதிகரித்து செல்லும் நிலையில் சாதாரண வாழ்வாதாரத்தைப் பெறுகின்ற மக்கள் பாரிய வறுமைக்கு முகம் கொடுக்கின்றனர்.

"தீர்வு எட்டப்படாத நிலையில் வழங்கப்படும் கடன் உதவிகள் நாட்டு மக்களை மேலும் வாழ்வாதார சுமைகளுக்கே உட்படுத்தும்." - இப்படி சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலையான பேண்தகு அபிவிருத்தியும் பொருளாதார மேம்பாடும் ஏற்பட வேண்டுமானால் அதற்கான சமுதாய சூழ்நிலை அவசியம். நல்லிணக்கமும், சமாதானமும், அமைதியும் நிலவும் புறச்சூழல் கட்டாயமானதாகும். நாட்டை உலுப்பி, சின்னாபின்னமாக்கி, இரத்த ஆறு ஓடவைத்து, அதன் தொடர்ச்சியாகப் பொருளாதார நெருக்கடியையும் ஏற்படுத்தி நிற்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

அந்தத் திசையில் இலங்கை நாடு முன்நகர்வதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலையே காணப்படுகின்றது.

எல்லாத் தரப்புக்களையும் திருப்திப்படுத்தி, சகல மக்களுக்கும் நியாயத்தைச் செய்கின்ற - நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - நீதி மற்றும் கௌரவமான - தீர்வு ஒன்று எட்டப்பட்டால் மாத்திரமே நிலையான பேண்தகு அபிவிருத்தியும், பொருளாதாரம் மீட்சியும் சாத்தியமாகும்.

நாட்டைக் கூறு போட்டு நிற்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் இல்லாமல் பொருளாதார மீட்சி சாத்தியப்படப் போவதில்லை.

# கமக்கார அமைப்பின் கால போக கூட்டம்

இருபாலை தெற்கு கமக்கரா அமைப்பின் காலபோக கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இருபாலைதெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவ்வேளை கமக்காரர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரணில் - பைடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறு உரையாடலுக்குப் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் பைடன் தம்பதிகளுடன் குழுவாக நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

## கஜேந்திரனைத் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 6 சந்தேகநபர்களும் நேற்று மாலை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கஜேந்திரன் எம்.பி. தலைமையிலான குழுவினர் கடந்த 17ஆம் திகதி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தியுடன் பயணித்தபோது திருகோணமலை, சர்தாபுர பகுதியில் வைத்து வழிமறிக்கப்பட்டனர். கஜேந்திரன் எம்.பி. உள்ளிட்ட 14 பேர் மீது அங்கு திரண்டிருந்த சிங்களவர்கள் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட்பட 6 பேரைக் கடந்த 18 ஆம் திகதி சீனக்குடா பொலிஸார் கைது செய்து திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவர்களுக்கு நேற்று வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்றுக் காலை திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.தர்ஷினி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை 6 சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் தொடர்ந்தும் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனினும், நேற்று மாலை குறித்த 6 சந்தேகநபர்களும் திருகோணமலை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலை உதவிப் பொலிஸ்மா அதிபரால் அவசரமாக முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

பொலிஸாரின் சமர்ப்பணத்தின்போது குறித்த சந்தேகநபர்களிடம் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், இவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவதால் ஆர்ப்பாட்டம், இனக்கலவரம் ஏற்படலாம் எனவும், அத்துடன் சாட்சிகள் வெளி மாவட்டங்களில் இருப்பதனால் சூம் தொழில்நுட்பம் மூலம் சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதாகவும், இவர்களைப் பிணையில் விடுவிப்பதில் தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து குறித்த சந்தேகநபர்கள் 6 பேரையும் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

# சர்வதேச நீதிப் பொறிமுறை கோரி மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்பு










(குனகராசா சரவணன்)

இலங்கையில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதி செய்யுமாறு கோரி நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உலக சமாதான தினத்தையொட்டி வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

அவர்கள் – "வேண்டும் வேண்டும் சர்வதேச நீதிப் பொறிமுறை – வடக்கு – கிழக்கு மக்களின் கலாசார தளங்களை அத்துமீறாதே – சமூகச் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்து – வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும் – வடக்கு – கிழக்கு தமிழ் – முஸ்லிம் மக்களின் இன அடையாளங்களை அழிக்காதே – போர்க்குற்றங்கள் செய்தவர்களை நீதியின் முன் நிறுத்து – வெள்ளை வான் கடத்தல்காரர்களை நீதியின் முன் நிறுத்து" எனப் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடாந்து ஐ.நாவுக்கான அறிக்கை ஒன்றை மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் கையளித்த பின்னர் போராட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேறினர்.



# வவுனியா இரட்டைக்கொலை; ஒருவர் நேற்று அடையாளம்!

## மூவருக்குப் பகிரங்கப் பிடியாணை

(வவுனியா நிருபர்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 6 பேரில் ஒருவர் அடையாள அணிவகுப் பின்போது அடையாளம் காணப்பட்டுள்ளது டன், தலைமறைவாகியுள்ள மூவருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று பகிரங்கப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தோணிக்கல் பகுதியில் கடந்த ஜுலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சப்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர். இந்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக் களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

அத்துடன், எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர், ஒருவரைத் தான் கண்டார் எனவும், அவரை அடையாளம் காட்ட முடியும் எனவும் விசாரணையின்போது தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்புக்குத் திகதியிடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த யுவதி நேற்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின்போது தாக்குதலில் ஈடுபட்ட ஒருவரை அடையாளம் காட்டியுள்ளார்.

மேலும், மூன்று சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப் பட்டமையால் அவர்களைக் கைது செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். குறித்த மூவரும் தலைமறைவாகவுள்ளதால் அவர்களைக் கைது செய்யப் பகிரங்க பிடியாணை உத்தரவு வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு விசாரணை எதிர்வரும் 5ஆம் திகதிக்குத் திகதியிடப் பட்டுள்ளது.



# மன்னாரை வந்தடைந்தது திலீபனின் ஊர்திப் பவனி



(மன்னார் நிருபர்)

தியாக தீபம் திலீபனின் 36 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப் படும் 'திலீபன் வழியில் வருகிறோம்' என்ற திலீபனின் திருவுருவப்படம் தாங் கிய ஊர்திப் பவனி பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்களுக்கும் அது சென்று, 7 ஆவது நாளான நேற்று வியாழக்கிழமை மாலை மன்னார் நகரை வந்தடைந்தது.

நேற்று மாலை 5.50 மணி அளவில் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தை தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி வந்தடைந்தது.

பின்னர் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் படத்திற்கு மக் கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தி னர்.

அதனைத் தொடர்ந்து பள்ளிமுனை, பனங்கட்டுக்கொட்டு,சாந்திபுரம்,எழுத்தூர் மற்றும் தாழ்வுபாடு ஆகிய கிராமங்களை நோக்கி மக்களின் அஞ்சலிக்காக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி சென்றது.













# கனடா தூதரக பணியாளர்களுக்கு சமூக ஊடகங்கள் மூலம் மிரட்டல்!




இந்தியாவிற்கான கனடா தூதரகம் தனது பணியாளர்கள் சமூக ஊடகங்களில் மிரட்டல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால், தனது பணியாளர்களின் எண்ணிக்கை தற்காலிகமாக குறைக் கப்பட்டுள்ளது என இந்தியாவிற்கான கனடா தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தியா தனது தூதரக இராஜதந் திரகள் மற்றும் பணியாளர்களிற்கு உரிய பாதுகாப்பை வழங்கும் என எதிர் பார்க்கிறோம் என்றும் கனடா தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தியாவிற்கான கனடா தூதரகமும் துணை தூதரங் களும் தொடர்ந்தும் திறந்திருந்து சேவைகளை வழங்கும் எனவும் தூத ரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மறு அறிவித்தல் வரும் வரை கனடா நாட்டினருக்கு விசா வழங்கும் நடவடிக்கையை நிறுத்தம் செய்யபட்டுள்ளது என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கனடாவிற்கான விசா வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தனியார் நிறுவனமான பி.எல்.எஸ். இன்டர்நேஷனல் தனது இணையதளத்தில், இந்திய தூதரகத்தின் முக்கிய அறிவிப்பு. செயல்பாட்டுக் காரணங்களுக்காக மறு அறிவிப்பு வரும் வரை இந்திய விசா சேவை நிறுத் தப்படுகிறது.

மேலும் தகவல்களுக்கு பி.எல்.எஸ். இணையதளத்தைப் பாருங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அரசின் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதன் தொடர்ச்சியாக இரு நாடு களுக்கு இடையேயான தூதரக உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியா கியுள்ளது.

முன்னதாக கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப் பிரிவின் தலைவரும் தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜ் ஜார் சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் புகைப்படங்களுடன் கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக இந்தியாவிற் கான கனடா தூதரகம், தனது பணி யாளர்கள் சமூக ஊடகங்களில் மிரட்டல் களை எதிர்கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ளது. அத்துடன், தனது பணியாளர்களின் எண்ணிக்கையை தற்காலிகமாக குறைக்கவுள்ளோம் என அறிவித்துள்ளது.

கனடா நாடாளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்திய அரசின் முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள் ளன என்று கூறினார்.

ஆனால் ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச் சாட்டுகளை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

கனடாவில் நிகழ்ந்த வன்முறைச் செயலுக்கு இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக தெரிவித்துள்ள குற்றச்சாட்டு அபத்தமானது. இது உள்நோக்கம் கொண்டது.

இதற்கு முன்பும் இதுபோனற குற்றச் சாட்டுகள் கனடா பிரதமரால் இந்திய பிரதமரிடம் தெரிவிக்கப்பட்டன. அப்போதே அவை முற்றிலும் நிராகரிக்கப்பட்டன என்று இந்திய வெளியுறவுத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘அவளுடன் நானும் இறந்துவிடடேன்’ விஜய் ஆண்டனியின் உருக்கமான அறிக்கை



‘அவளுடன் நானும் இறந்துவிடடேன்’ என்று மகளின் இறப்பு தொடர்பில் நடிகர் விஜய் ஆண்டனியின் உருக்கமான அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரபல இசையமைப்பாளரும், நடிக ருமான விஜய் ஆண்டனியின் மகளான மீரா கடந்த 19 ஆம் திகதி அதிகாலை உயிரிழந்தார்.

அதிகாலை 3 மணியளவில் இவர் தூக்கிட்டு உயிரை மாய்த்துக்கொண டார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

பிரேத பரிசோதனை முடிவடைந்து அவரது பெற்றோர் விஜய் ஆண்டனி – பாத்திமாவிடம் உடலம் ஒப்படைக் கப்பட்டது.

இதனையடுத்து, அவரது உடலானது டி.டி.கே சாலையில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், நடிகர் விஜய் ஆண்டனி அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், என் மகள் மீரா அன்பானவள், மற்றும் தைரியமான வள் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ‘அவள் தற்போது இந்த உலகை விட சிறந்த ஜாதி,மதம், பணம், பொறாமை, வலி, வறுமை,வன்மம் இல்லாத இடத்திற்கு சென்றுவிட்டாள். என்னிடம் பேசிக் கொண்டுதான் இருக்கின்றாள்.அவளுடன் நானும் இறந்துவிட்டேன்,

நான் இப்போது அவளுக்காக நேரம் செலவிட ஆரம்பித்து விட்டேன், அவள் பெயரில் நான் செய்யப்போகும் நல்ல காரியங்கள் அனைத்தையும், அவளே தொடங்கி வைப்பாள் என உருக்கமாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தென்மேற்கு கொலம்பியால் கார் குண்டு வெடிப்பு!





தென்மேற்கு கொலம்பியால் இடம் பெற்ற வெடி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவத்தில் மேலும் 2 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்மேற்கு கொலம்பியாவில் உள்ள டிம்பா பொலிஸ் நிலையம் அருகே உள்ள கார் ஒன்றில் இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் அருகில் உள்ள மருத்துவமனை, வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களும் சேதமடைந்துள்ளன என கூறப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் பயங்கரவாதிகளின் செயற்பாடாக இருக்கலாம் என அந்த நாட்டு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



## ஈரானில் விதிகளை மீறி ஆடை அணிந்தால் பெண்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை!



ஈரானில் ஆடை அணிவதில் விதிகளை மீறும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய புதிய சட்டமூலம் ஒன்றை அந்த நாட்டு நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றியுள்ளது.

இந்த சட்டமூலத்தின் அடிப்படையில், பொது இடங்களில் தகாத முறையில் உடை அணிபவர்களுக்கு 10 ஆண்டு வரை சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானின் தண்டனைச் சட்டத்தின்படி 180 மில்லியன் முதல் 360 மில்லியன் ரியால்கள் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஹிஜாப் மசோதா 152 இற்கு 34 என்ற நாடாளுமன்ற வாக்கெடுப்பு மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெண் சாரதிகள் அல்லது பயணிகள் ஆடைக்கட்டுப்பாட்டை மீறினால் வாகன உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் சட்டப்படி இளம்பெண்கள், சிறுமிகள் தங்கள் தலைமுடியை ஹிஜாப் மூலம் மறைக்க வேண்டும். அவர்களின் உடலை மறைக்க நீண்ட, தளர்வான ஆடைகளை அணிய வேண்டும் என கூறப்படுகிறது.

## சீனாவில் சூறாவளியில் சிக்கி 10 பேர் பலி!

சீனாவில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக 10 பேர் வரை உயிரிழந்துள்ளனர். சீனாவின் சியாங்சு மாகாணத்தில் சூறாவளி மணித்தியாலத்திற்கு 200 கிலோமீற்றர் வேகத்தில் வீசி வருகிறது என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சூறாவளியால் 200 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன என குறிப்பிடப்படுகிறது.

## உலக சாதனை படைத்துள்ள வெங்காயம்!



இங்கிலாந்து நாட்டில் ஹரோகேட் நகரில் இலையுதிர்கால மலர் கண்காட்சியையொட்டி காய்கறி போட்டி நடத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் மிகப்பெரிய அளவிலான காய்கறிகள் மற்றும் மலர்கள் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில் இங்கிலாந்து நாட்டின் வடக்கு யார்க்ஷயர் பகுதியை சேர்ந்த தோட்ட விவசாயி கரேத் கிரிபின் என்பவர் தனது தோட்டத்தில் விளைந்த பிரமாண்டமான வெங்காயத்தை காட்சிபடுத்தியுள்ளார்.

அந்த வெங்காயம் 8.97 கிலோ எடை கொண்டதாக இருந்ததுடன் உலகிலேயே பெரிய வெங்காயம் என்று உலக சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்பு 2014 ஆம் ஆண்டு 8.4 கிலோவில் பெரிய வெங்காயம் வளர்க்கப்பட்டதே சாதனையாக இருந்தது.

அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ள நிலையில் கிரிபின் தோட்டத்தில் வளர்ந்த வெங்காயத்தின் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உள்ளக விசாரணையை ஏற்க முடியாது!

## நாடாளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், சர்வதேச விசாரணையொன்று அவசியம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதம் நேற்று இடம்பெற்றபோது, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மற்றும் சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்காக தமிழ் பேசும் மக்களை அழிப்பது அல்லது பணயம் வைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிலரின் செயற்பாடுகள் காரணமாக தமிழர்கள் எவ்வாறு துரோகிகளாக பார்க்கப்பட்டார்களோ அதேபோல உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் மக்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியில் இருந்தபோது, இந்த விடயம் தொடர்பில் இந்தியா தமது உளவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ள போதும், அதற்கு முக்கியத்துவம் வழங்காது தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் அதனை ஏற்றுக் கொண்ட துர்ப்பாக்கிய நிலையை அவதானிக்க முடிவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் "சனல் 4" நிறுவனம் வெளியிட்டுள்ள ஆவணப்படத்தின் உண்மைத் தன்மையை ஆராய்வதை விட இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்தினார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உறவைப் பிரிப்பதற்காகவா உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டவர்களும் இருக்கின்ற நிலையில், சர்வதேச விசாரணை அவசியம் எனவும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் சர்வதேச விசாரணையைக் கோரும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கோரிக்கைக்குத் தாம் வலுவாக ஆதரவை வழங்குகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.



இதேபோன்று வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அசாம்பாவிதங்கள் தொடர்பிலும் குரல் எழுப்புமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை முன்வைத்தார்.

# வெளிநாட்டுக்கு அனுப்புவது என மோசடி: இந்த வருடம் 2,148 முறைப்பாடுகள் பதிவு

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில் பெற்றுத் தருவது மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்புவது எனக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட சம்பவங்கள் தொடர்பில் 2 ஆயிரத்து 148 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.



கடந்த வருடத்தில் 1,337 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் பணியகம் கூறியுள்ளது.

இந்த வருடத்தில் பதிவான முறைப்பாடுகளின் அடிப்படையில், 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார்.



# காட்டு யானை அட்டகாசம் கந்தளாயில் தொடர்கிறது

## மேலும் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை – கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கந்தளாய் – வெவ்சிறிகம பகுதியைச் சேர்ந்த தெபிலியனகே விமலரத்ன (வயது 69) எனவும் தெரியவருகின்றது.

வீட்டிலிருந்து அவர் நடந்து கடைக் குச் சென்று கொண்டிருந்தபோது இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக வும் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று கந்த ளாய் வைத்தியசாலையில் வைக்கப் பட்டிருந்தது. மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம் கந்தளாய் தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியவுள்பொத பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கந்தளாய் குளத்தை அண்மித்த பகுதி யில் மேலும் இரண்டு பொலிஸாருடன் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது யானையின் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றார்.

இதற்கிடையில் கடந்த செவ்வாயன்று திரியாய் கல்லம்பத்தை பகுதியில் விறகு எடுக்கச்சென்ற கல்லம்பத்தைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளை களின் தந்தையான பழனியாண்டி மணிவண்ணன் (வயது 56) என்பவரும் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# ஓய்வுபெற்ற இராணுவ சார்ஜன்ட் மேஜரான பெண்ணை டுபாயில் விபச்சாரத்தில் ஈடுபடுத்திய யுவதி சிக்கினார்

ஓய்வுபெற்ற இராணுவ சார்ஜன்ட் மேஜரான பெண்ணை சுற்றுலா விசா வில் டுபாய் நாட்டுக்கு அனுப்பி வைத்து, அங்கு விபச்சாரத்தில் ஈடுபடுத்தினார் எனக் கூறப்படும் பெண்ணொருவர் தம்புத்தேகம பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எப்பாவல பிரதேசத்தை சேர்ந்த 36 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் டுபாயில் வசிக்கும் உறவின ரான பெண்ணொருவர் மூலம் இந்தத் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அனுராதபுரத்தைச் சேர்ந்த இராணுவ சார்ஜன்ட் மேஜரான பெண் இராணு வத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 இலட்சம் ரூபாவை சந்தேகநபரான பெண்ணுக்கு வழங்கி, டுபாயில் உள்ள சிறப்பங்காடியில் தொழில் புரிய அங்கு சென்றுள்ளார்.

தன்னிடம் இருந்த தங்க ஆபர ணங்கள், ஓட்டோ உள்ளிட்ட பொருள் களை அடகு வைத்து பெற்றுக்கொண்ட 5 இலட்சம் ரூபா பணத்தைச் சந்தேக நபரான பெண்ணுக்கு வழங்கி அவர் டுபாய் சென்றுள்ளார்.

சுற்றுலா விசாவில் டுபாய் சென்ற பெண்ணை அங்குள்ள பிரதிநிதி, கைது செய்யப்பட்ட பெண் கூறிய தொழி லுக்கு அனுப்பாது இரண்டு சந்தர்ப்ப ங்களில் இரு இடங்களில் தங்க வைத்து விபச்சாரத்தில் ஈடுபடுத்தினார் எனத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.



ஓய்வுபெற்ற இராணுவ சார்ஜன்ட் மேஜரான பெண் வழங்கிய 5 இலட்சம் ரூபாவை சந்தேகநபரான பெண் டுபாய் நாட்டில் உள்ள தனது உறவினரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்துள் ளார்.

கைது செய்யப்பட்டுள்ள பெண்ணும், டுபாயில் வசிக்கும் அவரது உறவினரும் இலங்கையில் இருந்து பெண்களை சுற்றுலா விசாவில் டுபாய் அழைத் துச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்தி யுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

டுபாய் நாட்டில் கூறியபடி வேலை கிடைக்காத காரணத்தால், ஓய்வு பெற்ற இராணுவ சார்ஜன்ட் மேஜரான பெண் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என அங்குள்ள சந்தேக நபரான பெண்ணின் உறவினரிடம் கூறியுள்ளமையுடன் 4 இலட்சம் ரூபா பணத்தைக் கேட்டுள்ளார்.

இதனையடுத்து 4 இலட்சம் ரூபா வைப் பெற்றுக்கொண்டு அவர் இலங்கை திரும்பியுள்ளார்.


இலங்கை திரும்பிய பின்னர் டுபாயில் இலங்கைப் பெண்களை விபச்சாரத் தில் ஈடுபடுத்தும் நடவடிக்கை தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிய கம், இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் அவர் முறைப் பாடு செய்துள்ளார்.

இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரான பெண்ணை நேற்று தம்புத் தேகம பிரதேசத்தில் கைது செய்துள் ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் டுபாயில் வசிக் கும் பெண் எனவும், அவர் இலங்கை திரும்பும் போது கைது செய்வதற் காக வெளிநாட்டு பயணத் தடை யைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் போலியான தகவல் களை முன்வைத்து சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்றமை சம்பந்தமாக ஓய்வுபெற்ற இராணுவ சார்ஜன்ட் மேஜரான பெண்ணுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ள தாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

# தனது மனைவி தமிழ்ப் பெண் என நாடாளுமன்றில் கூறிய பிரசன்ன





தனது மனைவி ஒரு தமிழ்ப் பெண் எனவும், 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் நடந்த போது மனைவியை வெளியில் அழைத்துச் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது எனவும் அமைச்சர் பிரசன்ன ரண துங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “பிரதி சபாநாயகர் அவர்களே! நான் திருமணம் செய்திருப்பவர் தமிழ்ப் பெண். 83 ஆம் ஜூலைக் கலவரம் நடந்த காலத்தில் எனது மனைவியை என்னால் வெளியில் அழைத்துச் செல்ல முடியாமல் போனது.

இன, மத பேதங்களைத் தூண்டி மேற்கொண்டு வரும் மோசமான நடவடிக்கைகளே இதற்குக் காரணம். தற்போதும் அதனை இவர்கள் செய்கின்றனர்.

நான் மதியம் சிங்கள அரிசி சோறு சாப்பிடுகின்றேன் எனவும், இரவில் தோசையும் வடையையும் சாப்பிடுகின்றேன் எனவும் தேர்தல் காலங்களில் பிரசாரம் செய்தனர்.

எனினும் மூன்று வேளையும் நான் தோசை சாப்பிடுகின்றேன் என நான் தேர்தல் மேடைகளில் கூறினேன். நான் அரசியலில் ஈடுபடுவது மக்களுக்காகவே அன்றி மனைவிக்காக அல்ல.

சபையில் மிகக் கேவலமான கதைகளைக் கூறுகின்றனர்.” – என்றார்.




# 10 ரயில் எஞ்சின்களை வழங்குகிறது இந்தியா

இலங்கைக்கு 10 ரயில் எஞ்சின்களை வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

கடன் உதவியின் அடிப்படையில் இந்த ரயில் எஞ்சின்கள் இலங்கைக்குக் கிடைக்கும் என ரயில்வே பொது முகாமையாளர் குணசிங்க தெரிவித்துள்ளார்.

அவற்றைக் கொண்டுவருவதற்கு முன்னர் அவற்றின் தரங்களை ஆராய்வதற்காக ரயில்வே துறை அதிகாரிகள் குழுவொன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

எஞ்சின்கள் இல்லாமையால் ரயில் போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பழைய ரயில் எஞ்சின்கள் பழுது பார்க்கப்பட்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள போதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறினால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# இரண்டு பிரதான சூத்திரதாரிகளில் ஒருவர் மைத்திரி

## ஈஸ்டர் தாக்குதல் விவாதத்தில் பொன்சேகா குற்றச்சாட்டு



“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டு பிரதான சூத்திரதாரிகளில் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.”

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் “சனல் 4“ முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடும் வாக்குவாதம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவால் தனது இராணுவத் தலைமையகத்தைக் கூடப் பாதுகாக்க முடியவில்லை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததை தொடர்ந்தே இந்த வாக்குவாதம் இடம்பெற்றது.

இதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பிரதான சூத்திரதாரிகள் இருவரில் ஒருவர் மைத்திரிபால சிறிசேன என்று தெரிவித்தார்.

## நாட்டை வங்குரோத்து அடையச் செய்த

# மொட்டுக் கட்சியினரை ஐ.நாவுக்கு ஜனாதிபதி கூட்டிச் சென்றமை ஏன்?

## நாடாளுமன்றத்தில் சஜித் கேள்வி



ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்லும் போது நாட்டை வங்குரோத்து அடைய செய்த மொட்டுக்கட்சியை சேர்ந்த சிலரையும் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”ஜனாதிபதி மொட்டுக் கட்சியினரை மகிழ்விக்க இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். நாட்டு மக்களின் பணத்தை இப்படி வீணாக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கின்றேன்.

ஜனாதிபதி தேவையான அதிகாரிகளை அழைத்துச் சென்றிருந்தால் பரவாயில்லை. நாட்டை வங்குரோத்து அடையச் செய்த மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏன் அழைத்துச் சென்றார்?

மொட்டுக் கட்சியினரை மகிழ்விக்கவே அவர் இதனைச் செய்கின்றார். மக்களின் பணத்தை இப்படி விரயம் செய்ய வேண்டாம்.” – என்றார்.

இதற்குப் பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ”நாடு வங்குரோத்து அடைந்தமைக்குக் கதைக்கும் இவர்களே பொறுப்புக்கூற வேண்டும். நீண்டகாலம் இவர்களே நாட்டை ஆட்சி செய்தனர். மொட்டுக் கட்சி அண்மையாக காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கட்சி. காலையில் இங்கு வந்து பைத்தியமாக நடந்துகொள்ள வேண்டாம்.” – என்றார்.




# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் நீர் விளையாட்டு நிலையத்துக்கு விஜயம்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை - சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் சுற்றுலா முகாமைத்துவ கற்கை நெறியைப் பயிலும் இறுதி வருட பட்டதாரி மாணவர்கள் தியகவ நீர் விளை யாட்டு மத்திய நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மத்திய நிலையத்தில் இடம்பெறும் நீர் விளையாட்டின் முக்கியத் துவத்தை அறிந்து, வெளிநாடு மற்றும் உள்நாட்டில் உள்ள சுற்றுலாப் பயணி களுக்குப் பெரும் பங்களிப்பை வழங்கக் கூடிய இடமாக மாறியிருக்கின்றது.

நீரில் விளையாடக்கூடிய ஆபத் தில்லாத பல விளையாட்டுக்கள் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.



# பாடசாலை விளையாட்டில் ஒலுவின் மாணவன் சாதிப்பு

## மூன்று போட்டிகளில் பங்கேற்று 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்கள் பிடிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் ஒலு வில் அல்-ஹம்றா மாணவன் தங்கப் பதக்கம் வென்று சாதித்துள் ளார்.

கந்தளாயில் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கிடையிலான "மாகாண மட்ட மெய்வல்லுனர் விளை யாட்டுப் போட்டியில், அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவனான எம்.ஏ.ஆர்.ஹாபீஸ் ரய்ஹான் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

இவர் 60 மீற்றர்,100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முறையே 02 ஆம், 03ஆம் இடங்களையும் பெற்றுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 22.09.2023




வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளதால் உரையாடத் தொடங்குமுன் முறையாக யோசிக்க வேண்டும்.வெளிப்படையான, அனுசரணையான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி. முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று சில பதட்ட நிலை காணப்படும். மூளைக்கு சிறிது ஓய்வு கொடுப்பதன் மூலம் சிறந்த முடிவை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை மேற்கொள்ளும்போது சில தவறுகள் நேரலாம்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இது மிகவும் அவசியம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. உங்கள் பொறுப்புகளை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதட்டம் காரணமாக முதுகுவலி ஏற்படலாம். அமைதியாக இருங்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். தேவையற்ற கவலைகள் வருத்தம் அளிக்கும். அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

பணியில் செய்யும் தவறுகள் காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். உங்கள் பணியில் கவனம் தேவை.

உங்கள் துணையுடனான உறவுமுறை சுமூகமாக இருக்காது. பிரச்சினைகளை சமாளிக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற குடும்ப பொறுப்புகள் காரணமாக செலவு அதிகரிக்கும். இதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் காரணமாக இன்று கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீக விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும்.இதன் மூலம் மகிழ்ச்சியும் ஆறுதலும் கிடைக்கும். அனுபவ அறிவு நல்ல ஆறுதலை அளிக்கும்.

இன்று பணியிடச் சூழல் மகிழ்சி–கரமாக இருக்காது. அதிகப் பணிகள் இருந்தாலும் அதைப் பற்றி கவலைபடாமல் இருங்கள். பணிகள் சுமூகமாக நடக்க கைதேர்ந்தவர்களின் ஆலோசனை பெறுங்கள்.

இன்று தேவையற்ற வார்த்தைகள் பேச வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்க உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

இன்றுதேவையற்றசெலவுகள்ஏறபடும்.இதுஉங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் அனைத்தும் சுமூகமாகச் செல்லும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். பதட்டமான சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் அதற்கு இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருப்பது நல்லது.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்றும் ஸ்திரத்தன்மை காணப்படாது. சகபணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது.மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையிடம் அமைதி இழப்பீர்கள்.

அவசரம் காரணமாக தேவையற்ற பணச் செலவுகள் ஏற்படும். அதற்காக பிறகு வருந்த நேரலாம். அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படலாம்.

ஒவ்வாமை காரணமாக தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் கண் பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -22.09.2023




இன்று சில சவால்கள் எழ வாய்ப்புள்ளது. இன்று பாதுகாப்பின்மை காணப்படும். இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும். ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக்கும்.

பணிகளை குறித்தநேரத்தில் உங்களால் முடிக்க இயலாது. தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ளவும்.

உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். சில பிரச்சினை காரணமாக இருவரிடையே மோதல் ஏற்படும். இந்த சூழ்நிலையை சமாளிக்க பிரச்சினையை தீர்க்க முயலுங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று ஆக்கப்பூர்வமான நாள். இன்று புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் லாபகரமானதாக இருக்கும்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலும். நீங்கள் தொழில் சார்ந்த முறையில் உங்கள் பணிகளை உற்சாகமாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை உறவின் மதிப்பை புரிந்து கொள்வார்.

உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சிறந்த நாள். இன்று உங்களால் அதிகமாக சேமிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் கூடுதல் சக்தி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். சுய முன்னேற்றத்துக்கான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். முயற்சிகள் எளிதாக இருக்கும். நீங்கள் உங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை திருப்தியான நிலை காணப்படும். தரமான பணிகளை வழங்கி மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை பராமரிப்பீர்கள். சுமூகமான சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று அதிக பணவரவு காணப்படும். நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். ஆன்மீக செயல்கள் உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.




உங்கள் நலத்திற்காக இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் இன்றைய நாளை சுமூகமாக்கலாம். வருவதை அப்படியே எதிர்கொள்ளுங்கள்.

பணியிடத்தில் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்காது. திருப்தி நிலை குறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும் போது பொறுமை இழப்பீர்கள். இது எதிர்மறை எண்ணத்தை உருவாக்கி உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நிலை குறித்த கவலை காணப்படும். இதனால் செலவுகள் அதிகரிக்கும்.





